<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>
<u>முன்னிலை திரு.தி.திருமால், பி.ஏ., பி.எல்.,</u>
<u>கூடுதல் சார்பு நீதிபதி, காஞ்சிபுரம், (பொறுப்பு).</u>
<u>2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15ஆம் நாள் புதன்கிழமை</u>
<u>அசல் வழக்கு எண்.98/2014</u>
<u>CNR No.TNKP.07-000685/2014.</u>

அமுதகனி

....வாதி.

/எதிராக/

1.சேகர்
2.வசந்தி
3.விஜயலட்சுமி
(Amended as per Order in I.A.No.1/22 dated 21.09.2023 and 2/2023 dated 19.12.2023.)

...பிரதிவாதிகள்.

இவ்வழக்கு 27.03.2026 அன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது வாதிக்காக கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.C.யதுநந்தன் அவர்கள் முன்னிலையாகியும், முதல் பிரதிவாதிக்காக திரு.L.சௌமியா நாராயணன் மற்றும் M.பிரியா ஆகியோர் முன்னிலையாகியும், 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்காக திரு.S.ராமமூர்த்தி மற்றும் R.பாலாஜி ஆகியோர் முன்னிலையாகியும், இருதரப்பிலும் உள்ள சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>தீர்ப்புரை</u>

வாதிகள் இந்த வழக்கினை, வழக்கு சொத்தில் வாதிக்கு 1/2 பாகம் பிரித்து தரக் கோரி முதல் நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க கோரியும், அதனை வழக்கறிஞர் ஆணையரை நியமித்து இறுதிநிலை தீர்ப்பாணையின் மூலம் நிறைவேற்றிடவும், வழக்கு சொத்திற்கான இடைக்கால வருவாய் கோரியும், மற்றும் வழக்கின் செலவுத் தொகைக்காகவும் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.<u>வாதியின் வழக்குரையின் சுருக்கம்</u>

வாதி தனது வழக்குரையில், வழக்கின் முதல் பிரதிவாதி தனது தந்தை என்றும், வழக்கு அட்டவணை சொத்து ஆதியில் பாப்பாத்தியம்மாள் என்பவருக்கு சொந்தமானது என்றும், அதாவது வாதியின் தாய்வழி பாட்டிக்கு சொந்தமானது என்றும், மேற்படி பாப்பாத்தியம்மாள என்பவருக்கு 17.11.1965 அன்று அவரது கணவர் பொன்னுசாமி முதலியார் எழுதிவைத்த செட்டில்மெண்ட் பத்திரம் முன்னிலைக்கு கிடைக்கப்பெற்றது என்றும், மேற்படி பாப்பாத்தியம்மாள் 02.12.1998 அன்று மைனராக இருந்த தனது சகோதரர் குப்புசாமிக்கு சாதகமாக செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்தார் என்றும், மேற்படி செட்டில்மெண்ட் பத்திரத்தை நிறைவேற்றும்போது தனது சகோதரர் மைனர் என்றும், எனவே, அவருக்கு பாப்பாத்தியம்மாள் பாதுகாவலர் மற்றும் பிரதிநிதியாக இருந்தார் என்றும், அதாவது குப்புசாமி தன்னைத்தானே பார்த்துக்கொள்ள இயலாதவர் என்பதால் பாப்பாத்தியம்மாளின் பராமரிப்பில் இருந்தார் என்றும், செட்டில்மெண்ட் பத்திரம் பாப்பாத்தியம்மாள் என்பவரால் நிறைவேற்றப்பட்டாலும், அதை குப்புசாமி ஏற்கவில்லை அல்லது செயல்படுத்தப்படவில்லை என்றும், வாதியின் தாயார் மல்லிகா 22.07.1988 அன்று இறந்துவிட்டதாகவும், முதல் பிரதிவாதி மீண்டும் மீரா என்பவரை திருமணம் செய்துகொண்டார் என்றும், இரண்டாவது மனைவி மூலம் பிரதிவாதிக்கு இரண்டு குழந்தைகள் பிறந்த நிலையில், வாதியை முற்றிலும் புறக்கணித்துவிட்டார் என்றும், வாதியை கவனிக்கவில்லை என்றும், தாய் மல்லிகாவின் மரணத்திற்கு பிறகு, பிரதிவாதி, தனது இரண்டாவது மனைவி மற்றும் குழந்தைகள் மீது அதிக அக்கறை காட்டினார் என்றும், வழக்கு அட்டவணை சொத்து இன்றும் வருவாய் பதிவேடுகளில்

பாப்பாத்தியம்மாள் பெயரில் உள்ளது என்றும், அந்தச் சொத்து பாப்பாத்தியம்மாளின் முழுச் சொத்தாகும் என்றும், மேலும் அவர் 19.12.2007 அன்று தனது 90 வயதில் இறந்துவிட்டார் என்றும், மேலும் அவர் இறக்கும் வரை அவர் மட்டுமே வழக்கு சொத்தை அனுபவித்து, தனி உரிமையாளராக இருந்து வாடகை வருமானத்தை அனுபவித்து வந்தார் என்றும், பாப்பாத்தியம்மாளின் மரணத்திற்குப் பிறகு, பிரதிவாதி கற்பனையாக வழக்கு சொத்தில் முழு உரிமை கோருவதாகவும், வாதியின் சட்டப்பூர்வ உரிமையை மறுத்ததாகவும், வாதிக்கும் வழக்கு சொத்தில் முழு உரிமை உள்ளது என்றும், பிரதிவாதி வாதிக்கு உரிய பங்கு தராமல் சொத்தை அபகரிக்க பார்ப்பதாகவும், பிரதிவாதி கற்பனையான மற்றும் போலியான ஆவணங்களை உருவாக்கி வாதியின் உரிமையை மறுக்கிறார் என்றும், பிரதிவாதியின் இத்தகைய செயல் முற்றிலும் சட்டவிரோதமானது, நியாயமற்றது, சட்டத்திற்கு புறம்பானது என்றும், பிரதிவாதியின் இத்தகைய செயல் வாதியை எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தாது என்றும், பிரதிவாதி வாதியையும், வழக்கு சொத்தில் உள்ள வாடகைதாரர்களையும் மிரட்டி வாடகையை வசூல் செய்து கொள்வதாகவும், அவ்வாறு வாடகையை வசூலிக்க பிரதிவாதிக்கு சட்டப்படி உரிமை இல்லை என்றும், பிரதிவாதி மூன்றாம் நபர்களுக்கும், அவரது இரண்டாவது மனைவி மற்றும் பிள்ளைகளுக்கு ஆதரவாக போலியான ஆவணங்களை ஏற்படுத்தி, வழக்கு சொத்தில் வாதியின் உரிமையை மறுக்க முயற்சி செய்வதாகவும், வாதிக்கருகில் வழக்கு சொத்தின் ஒரு பகுதியில் வெங்கடேசன் என்பவர் ரூ.1,000/– மாத வாடகைக்கும், கணேசன் என்பவர் ரூ.1,200/– மாத வாடகைக்கும், ஜோதி என்பவர் ரூ.1,500/– மாத வாடகைக்கும், வசித்து வருகிறார்கள் என்றும், எனவே வாதியும் வழக்கு சொத்தின் இணை உரிமையாளர் என்கிற அடிப்படையில், பிரதிவாதிக்கும்,

வாடகைதாரர்களுக்கும் வாதி 27.05.2013 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும், அதற்கு பிரதிவாதி மட்டுமே 08.06.2013 அன்று பொய்யான குற்றச்சாட்டுகளை கூறி பதில் அனுப்பியதாகவும், வாடகைதாரர்கள் பதில் ஏதும் அனுப்பாமல் இடத்தை காலி செய்துவிட்டார்கள் என்றும், வழக்கு நிலுவையில் இருக்கும்பொழுது 2 மற்றும் 3 பிரதிவாதிகள் தங்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்குமாறு இடைநிலை மனு எண்.1/2022 தாக்கல் செய்தார்கள் என்றும், அதன்படி அவர்கள் 2 மற்றும் 3ஆம் பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டதாகவும், வழக்கு சொத்து பாப்பாத்தியம்மாள் என்பவருக்கு மட்டுமே பாத்தியப்பட்டு, அவரது இறப்பு காலம் வரை ஆண்டு அனுபவித்து வந்தார் என்றும், எனவே வாதிக்கும் வழக்கு சொத்தில் 1/2 பாகம் உள்ளது என்றும், அதேபோல் பிரதிவாதிக்கும் வழக்கு சொத்தில் 1/2 பாகம் உள்ளது என்றும், வாதியின் தாயார் மல்லிகா கடந்த 22.07.1988 அன்று இறந்துவிட்டார் என்றும், மேற்படி மல்லிகா அவரது தந்தையார் சண்முக சுந்தரம் மூலம் கதவு எண்.30, டவுன் சர்வே எண்.2505 ஏகாம்பரநாதர் சன்னதி தெருவில் உள்ள வீடு அவருக்கு கிடைக்கப்பெற்றது என்றும், அந்த சொத்து குறித்து மல்லிகாவின் சகோதரி வசந்தி என்பவர் அசல் வழக்கு எண்.124/2008 இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றும், அந்த வழக்கில் இந்த வழக்கின் வாதி முதல் பிரதிவாதி என்றும், இந்த வழக்கின் முதல் பிரதிவாதி, அந்த வழக்கில் 3ஆம் பிரதிவாதி என்றும், அவ்வழக்கில், தனது தந்தையாராக இந்த வழக்கின் முதல் பிரதிவாதி வாதியின் பாகத்தை ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், வழக்கு சொத்தில் ஒரு பகுதியில் வாதி வசித்து வருவதாகவும், மின் இணைப்பு பெற்று மின் கட்டணம் தனியாக செலுத்தி வருவதாகவும், பிரதிவாதி வழக்கு சொத்திற்கான சொத்து வரியை தன் பெயருக்கு

மாற்ற முயற்சி செய்ததாகவும், வாதி காஞ்சிபுரம் நகராட்சியில் உரிய நேரத்தில் ஆட்சேபனை தெரிவித்து அதனை தடுத்துவிட்டதாகவும், காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், காவல் அதிகாரிகள் பிரதிவாதியை எச்சரித்து அனுப்பினார்கள் என்றும், மேலும் வாதி வழக்கு சொத்தில் கூட்டு சுவாதீனத்தில் தொடர்ந்து இருக்க இயலாது என்றும், எனவே பிரதிவாதிகள் மீது 1/2 பாகம் கேட்டும், இடைக்கால வருவாய் கோரியும் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

3. முதல் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரை சுருக்கம்

முதல் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரையில், வாதிக்கும் தனக்கும் உள்ள உறவு முறையை ஒப்புக்கொள்வதாகவும், வாதி தன்னுடைய மகள் என்றும், பாப்பாத்தி அம்மாள் வழக்கு சொத்தை தன்னுடைய மகன் குப்புசாமிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்தார் என்றும், செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதன் அசல் ஆவணத்தை தன்னிடம் ஒப்படைத்துவிட்டார் என்றும், எனவே, செட்டில்மெண்ட் ஆவணம் நடைமுறைக்கு வந்து குப்புசாமி அவர்கள் வழக்கு சொத்தின் முழு உரிமையாளர் ஆவார் என்றும், வழக்கு சொத்து சம்பந்தமாக எந்த ஒரு ஏற்பாடும் செய்யாமல் குப்புசாமி காலமாகிவிட்டார் என்றும், தன்னுடைய மகன் குப்புசாமிக்கு முதல்நிலை வாரிசுதாரர்கள் யாரும் உயிருடன் இல்லை என்றும், இந்த பிரதிவாதி அவருடைய இரண்டாம் நிலை வாரிசுதாரர் என்பதனால் வழக்கு சொத்து, மரபு வழியாக தனக்கு கிடைக்கப்பெற்றது என்றும், வாதியின் தாயார் மற்றும் தன்னுடைய முதல் மனைவி மல்லிகா என்பவர் மேற்படி குப்புசாமிக்கு முன்பாகவே காலமாகிவிட்டார் என்றும், மேலும் தன்னுடைய முதல் மனைவி மல்லிகா இறந்த பின்பு, பாப்பாத்தி அம்மாள் 19 ஆண்டு காலம் உயிருடன்

இருந்தார் என்றும், அவர் உயிருடன் இருந்தபொழுது செட்டில்மெண்ட் ஆவணத்திற்கு பாதகமாக எந்த ஒரு செயலிலும் ஈடுபடவில்லை என்றும், எனவே வாதி வழக்குரையில் கூறியுள்ள கூற்று உண்மைக்கு புறம்பானவை என்றும், இந்து வாரிசுரிமைச் சட்டம் நடைமுறைக்கு வந்த பிறகு, Doctrine of Reversion ஒழிக்கப்பட்டுவிட்டது என்றும், இந்த பிரதிவாதிதான் வழக்கு சொத்திற்கு முழு உரிமையாளர் என்றும், வாதிக்கு வழக்கு சொத்தின் மீது எந்த உரிமையும் கிடையாது என்றும், வாதி வழக்கு சொத்தில் உள்ள வாடகைதாரருக்கு சட்ட அறிவிப்பு கொடுத்தார் என்றும், அதனால் வாடகைதாரர்கள் வழக்கு சொத்தில் இருந்த வீட்டை காலி செய்துகொண்டு சென்றுவிட்டனர் என்றும், இது வாதியின் தீய குணத்தை காட்டுகிறது என்றும், வாதி T.S.ஜனார்தனன் என்பவரை காதலித்து திருமணம் செய்து கொண்டார் என்றும், வாதி தன்னுடைய மகள் என்பதனால் பிரதிவாதி தன்னுடைய சொத்தில் அனுமதித்ததாகவும், அதனை சாதகமாக பயன்படுத்திக்கொண்டு வாதி தனக்கு பிரச்சினை கொடுத்து வருகிறார் என்றும், வாதி வளர்ப்பு நாய் வைத்துக் கொண்டு வாடகைதாரர்களை பயமுறுத்தி வருகிறார் என்றும், பிரதிவாதி வாடகை கொடுக்க எந்த ஒரு அவசியமும் இல்லை என்றும், ஏனென்றால் வாதிக்கு தாவா சொத்தில் எந்த ஒரு உரிமையும் இல்லை என்றும், அதனால் வாதிக்கு தாவா சொத்தில் பங்கு தரவேண்டிய அவசியம் ஏற்படாது என்றும், வாதி சரியான நீதிமன்ற கட்டணத்தை செலுத்தவில்லை என்றும், வழக்கு சொத்து கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்றும், வழக்கு சொத்து கூட்டு குடும்ப சொத்து அல்ல என்றும், எனவே வழக்கு தள்ளுபடி செய்திட வேண்டும் என்று முதல் பிரதிவாதி கோருகிறார்.

4. இரண்டாம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரை சுருக்கம்

இரண்டாம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரையில், இந்த எதிர்வழக்குரையை தனக்காகவும், 3ஆம் பிரதிவாதிக்காகவும் தாக்கல் செய்வதாகவும், 3ஆம் பிரதிவாதி தன்னுடைய சகோதரி ஆவார் என்றும், இந்த வழக்கில் ஐந்தில் ஒரு பாகம் கோரி எதிர்வியாஜ்ஜியம் செய்வதாகவும், மேற்படி வழக்கில் வாதி, பிரதிவாதிகளுக்கு எதிராக 1/2 பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கு சொத்து ஆதியில் தங்கள் தாய்வழி பாட்டியான காலம் சென்ற திருமதி.பாப்பாத்தியம்மாள் என்பவருக்கு சொந்தமானது என்றும், வழக்கு சொத்து மேற்படி பொன்னுசாமி முதலியார் மூலம் 17.11.1965 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் முன்னிலைக்கு பாப்பாத்தியம்மாளுக்கு கிடைக்கப்பெற்ற சொத்து என்றும், மேற்படி பாப்பாத்தியம்மாள் தனது மகள் வழி பேரனான மைனர் குப்புசாமிக்கு 02.012.1998 அன்று செட்டில்மெண்ட் எழுதிவைத்தார் என்றும், அப்பொழுது மேற்படி குப்புசாமிக்கு 12 வயதுதான் என்றும், எனவெ மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தில் பாதுகாவலராக பாப்பாத்தியம்மாள் நியமிக்கப்பட்டார் என்றும், மேற்படி குப்புசாமி 11.07.2010 அன்று காலமான பிறகு அது அமலுக்கு வரவில்லை என்றும், மேலும் வருவாய் ஆவணங்களிலும் தாவா சொத்தின் உரிமை பாப்பாத்தியம்மாள் பெயரிலேயே இன்றுவரை இருந்து வருகிறது என்றும், மேற்படி பாப்பாத்தியம்மாள 19.12.2007 ஆம் ஆண்டு இறந்துவிட்டார் என்றும், மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் இன்று வரை அமலுக்கு வராமல் பாப்பாத்தியம்மாள் பெயரில் ஆவணங்கள் உள்ளது என்றும், தாவா சொத்தில் பாப்பாத்தி அம்மாள் கடைசி மூச்சு உள்ளவரை வாடகைக்கு இருக்கும் நபர்களிடம் உரிமையாளர் என்ற வகையில் வாடகை வசூல் செய்து வந்தார் என்றும்,

மேற்படி பாப்பாத்தியம்மாள் ஒரு பொன்னுசாமி என்பவரை திருமணம் செய்து கொண்ட பின்பு மேற்படி பாப்பாத்தியம்மாளுக்கும் பொன்னுசாமி முதலியாருக்கும் ஒரே குழந்தையாக ஒரு கஸ்தூரி அம்மாள் என்பவர் பிறந்தார் என்றும், அவருக்கு சண்முகம் சுந்தரம் என்பவருக்கு திருமணம் செய்து கொண்டு அவர்கள் இருவருக்கும் ஐந்து பெண் குழந்தைகள் முறையே வசந்தி, விஜயலட்சுமி, ஷர்மிளா, சசிகலா, மற்றும் மல்லிகா ஆகிய ஐந்து பெண் குழந்தைகள் என்றும், இந்த வழக்கின் வாதி அமுதக்கனி மல்லிகாவின் மகள் ஆவார் என்றும், மல்லிகாவின் கணவரான திரு.சேகர் முதல் பிரதிவாதி ஆவார் என்றும், இவர்களுக்கு பிறந்த குழந்தைகள் காலஞ்சென்ற குப்புசாமி மற்றும் வாதியாகிய அமுதக்கனி ஆகிய இருவர் மட்டுமே என்றும், குப்புசாமி தன் தாயார் மல்லிகாவுக்கு முன்பே இறந்துவிட்டார் என்றும், ஆகவே, தாவா சொத்தின் ஒரு பாக உரிமை மல்லிகாவின் கணவர் என்ற முறையில் முதல் பிரதிவாதியான சேகர் அவர்களுக்கும், வாதி அமுதக்கனி என்பவருக்கும், 1/2 பாகம் உரிமை உள்ளது என்றும், மேலும் காலஞ்சென்ற மல்லிகாவின் கணவர் ஒரு மீரா என்பவரை இரண்டாம் திருமணம் செய்துகொண்டார் என்றும், அவர்களுக்கு இரு குழந்தைகள் என்றும், மேற்படி சேகர், வாதி அமுதக்கனி மற்றும் காலஞ்சென்ற குப்புசாமி ஆகியோரை எந்தவிதமான பராமரிப்பும் செய்யாத காரணத்தினால் மேற்படி மல்லிகாவின் பாட்டியான காலஞ்சென்ற பாப்பாத்தியம்மாள் குப்புசாமிக்கு ஒரு ஆதரவு செய்யவேண்டும் என்ற காரணத்தின் அடிப்படையில், 02.12.1998 தேதியில் தன்னுடைய கொள்ளுபேரன் குப்புசாமிக்கு தாவா சொத்து குறித்து செட்டில்மெண்ட் ஆவணம் செய்து வைத்தார் என்றும், அந்த செட்டில்மெண்ட் ஆவணம் ஆச்சாரத்துக்கும் அமலுக்கும் வராத நிலையில் குப்புசாமி காலமாகிவிட்டதால், மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிய

சொத்துக்கு உரிமையாளரான பாப்பாத்தியம்மாள் பெயரில் சென்றுவிட்டது என்றும், அந்த செட்டில்மெண்ட் ஆவணம் குப்புசாமி இருக்கும் வரை மேஜர் வயது எட்டிய உடனும் நடைமுறைக்கு வரவில்லை என்றும், மேற்படி தாவா சொத்து குறித்து வழக்கின் 2 மற்றும் 3 பிரதிவாதிகள் இடைநிலை மனு எண்.1/2022 உத்தரவின்மூலம் வழக்கில் தரப்பினராக இணைத்துக் கொண்டு தன்னுடைய பாட்டியான பாப்பாத்தி அம்மாள் 02.12.1998 தேதிய மைனர் குப்புசாமி செட்டில்மெண்ட் எழுதி வைத்த தாவா சொத்தை 1/5 தலா வசந்தி, சியாமளா, சசிகலா, மல்லிகா, விஜயலட்சுமி ஆகியோர்களுக்கு சரிசமமாக வழங்கி உத்தரவிடக்கோரி எதிர்வியாஜ்ஜியம் தாக்கல் செய்வதாகவும், 2 மற்றும் 3 பிரதிவாதிகள் இருவரும் உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்த தயாராக இருப்பதாகவும், எனவே வழக்கு சொத்தில் 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கும் தலா 1/5 பாகம் வழங்கி உத்தரவிடுமாறு கோரியுள்ளனர்.

5.வழக்கெழு வினாக்கள்

1. வழக்கு சொத்து வாதி மற்றும் பிரதிவாதியின் கூட்டு குடும்ப சொத்தா?
2. வழக்கு சொத்தில் வாதிக்கு 1/2 பாகம் வாதிக்கு வழங்கத்தக்கதா?
3. இடைக்கால வருவாய் பரிகாரம் வாதிக்கு வழங்கத்தக்கதா?
4 .வாதிக்கு வழங்கத்தக்க இதர பரிகரங்கள் என்ன?

6. வாதி தரப்பில் வாதி அமுதகனி வா.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். அவர் தரப்பில் 1 முதல் 10 ஆவணங்கள் வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் முதல் பிரதிவாதி சேகர் பி.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். அவரது தரப்பில் பி.சா.ஆ.1 முதல் 6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் 2ஆம் பிரதிவாதி வசந்தி பி.சா.2 ஆக சாட்சியம் அளித்துள்ளார். அவர்களது தரப்பில் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

7. வழக்கெழு வினா 1 முதல் 4–ற்கான தீர்வு

வாதி தனது வழக்குரையில், வழக்கின் முதல் பிரதிவாதி தனது தந்தை என்றும், வழக்கு அட்டவணை சொத்து ஆதியில் பாப்பாத்தியம்மாள் என்பவருக்கு சொந்தமானது என்றும், அதாவது வாதியின் தாய்வழி பாட்டிக்கு சொந்தமானது என்றும், மேற்படி பாப்பாத்தியம்மாள என்பவருக்கு 17.11.1965 அன்று அவரது கணவர் பொன்னுசாமி முதலியார் எழுதிவைத்த செட்டில்மெண்ட் பத்திரம் முன்னிலைக்கு கிடைக்கப்பெற்றது என்றும், மேற்படி பாப்பாத்தியம்மாள் 02.12.1998 அன்று மைனராக இருந்த தனது சகோதரர் குப்புசாமிக்கு சாதகமாக செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்தார் என்று தெரிவித்துள்ளார். மேற்படி 02.12.1998 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் வாதி தரப்பில் **வா.சா.ஆ.1 ஆக** குறியீடு செய்யப்பட்டுள்ளது.

8. மேற்படி செட்டில்மெண்ட் பத்திரத்தை நிறைவேற்றும்போது தனது சகோதரர் மைனர் என்றும், எனவே, அவருக்கு பாப்பாத்தியம்மாள் பாதுகாவலர் மற்றும் பிரதிநிதியாக இருந்தார் என்றும், அதாவது குப்புசாமி தன்னைத்தானே பார்த்துக்கொள்ள இயலாத மைனர் என்பதால் பாப்பாத்தியம்மாளின் பராமரிப்பில் இருந்தார் என்றும், செட்டில்மெண்ட் பத்திரம் பாப்பாத்தியம்மாள் என்பவரால் நிறைவேற்றப்பட்டாலும், அதை குப்புசாமி ஏற்கவில்லை அல்லது செயல்படுத்தப்படவில்லை என்றும், வாதியின் தாயார் மல்லிகா 22.07.1988 அன்று இறந்துவிட்டதாகவும் தெரிவித்துள்ளார். மல்லிகா என்பவரின் இறப்புசான்று நகல் **வா.சா.ஆ.2 ஆக** வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

9. முதல் பிரதிவாதி மீண்டும் மீரா என்பவரை திருமணம் செய்துகொண்டார் என்றும், இரண்டாவது மனைவி மூலம் பிரதிவாதிக்கு இரண்டு குழந்தைகள் பிறந்த

நிலையில், வாதியை முற்றிலும் புறக்கணித்துவிட்டார் என்றும், வாதியை கவனிக்கவில்லை என்றும், தாய் மல்லிகாவின் மரணத்திற்கு பிறகு, பிரதிவாதி, தனது இரண்டாவது மனைவி மற்றும் குழந்தைகள் மீது அதிக அக்கறை காட்டினார் என்றும், வழக்கு அட்டவணை சொத்து இன்றும் வருவாய் பதிவேடுகளில் பாப்பாத்தியம்மாள் பெயரில் உள்ளது என்றும், அந்தச் சொத்து பாப்பாத்தியம்மாளின் முழுச் சொத்தாகும் என்றும், மேலும் அவர் 19.12.2007 அன்று தனது 90 வயதில் இறந்துவிட்டார் என்றும் தெரிவித்துள்ளார். மேற்படி பாப்பாத்தியம்மாள் என்பவரின் இறப்புச் சான்றிதழ் நகல் **வா.சா.ஆ.4** ஆக வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

10. மேலும் பாப்பாத்தியம்மாள் இறக்கும் வரை அவர் மட்டுமே வழக்கு சொத்தை அனுபவித்து, தனி உரிமையாளராக இருந்து வாடகை வருமானத்தை அனுபவித்து வந்தார் என்றும் தெரிவித்துள்ளார். அதன்பிறகு மேற்படி குப்புசாமி என்பவரும் 11.07.2010 அன்று இறந்துவிட்டதாக தெரிவித்துள்ளார். அவரின் இறப்புச் சான்றிதழ் **வா.சா.ஆ.3** ஆக வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பாப்பாத்தியம்மாளின் மரணத்திற்குப் பிறகு, பிரதிவாதி கற்பனையாக வழக்கு சொத்தில் முழு உரிமை கோருவதாகவும், வாதியின் சட்டப்பூர்வ உரிமையை மறுத்ததாகவும், வாதிக்கும் வழக்கு சொத்தில் முழு உரிமை உள்ளது என்றும், பிரதிவாதி வாதிக்கு உரிய பங்கு தராமல் சொத்தை அபகரிக்க பார்ப்பதாகவும், பிரதிவாதி கற்பனையான மற்றும் போலியான ஆவணங்களை உருவாக்கி வாதியின் உரிமையை மறுக்கிறார் என்றும், பிரதிவாதியின் இத்தகைய செயல் முற்றிலும் சட்டவிரோதமானது, நியாயமற்றது, சட்டத்திற்கு புறம்பானது என்றும், பிரதிவாதியின் இத்தகைய செயல் வாதியை எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தாது என்று தெரிவிக்கிறார்.

11. முதல் பிரதிவாதி வாதியையும், வழக்கு சொத்தில் உள்ள வாடகைதாரர்களையும் மிரட்டி வாடகையை வசூல் செய்து கொள்வதாகவும், அவ்வாறு வாடகையை வசூலிக்க பிரதிவாதிக்கு சட்டப்படி உரிமை இல்லை என்றும், பிரதிவாதி மூன்றாம் நபர்களுக்கும், அவரது இரண்டாவது மனைவி மற்றும் பிள்ளைகளுக்கு ஆதரவாக போலியான ஆவணங்களை ஏற்படுத்தி, வழக்கு சொத்தில் வாதியின் உரிமையை மறுக்க முயற்சி செய்வதாகவும், வாதிக்கருகில் வழக்கு சொத்தின் ஒரு பகுதியில் வெங்கடேசன் என்பவர் ரூ.1,000/– மாத வாடகைக்கும், கணேசன் என்பவர் ரூ.1,200/– மாத வாடகைக்கும், ஜோதி என்பவர் ரூ.1,500/– மாத வாடகைக்கும், வசித்து வருகிறார்கள் என்றும், எனவே வாதியும் வழக்கு சொத்தின் இணை உரிமையாளர் என்கிற அடிப்படையில், பிரதிவாதிக்கும், வாடகைதாரர்களுக்கும் வாதி 27.05.2013 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும் தெரிவித்துள்ளார். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பு வாதி தரப்பில் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது., அதற்கு முதல் பிரதிவாதி 08.06.2013 அன்று பதில் அனுப்பியதாகவும் தெரிவித்துள்ளார். மேற்படி பதில் அறிவிப்பு **வா.சா.ஆ.6** ஆக வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாடகைதாரர்கள் பதில் ஏதும் அனுப்பாமல் இடத்தை காலி செய்துவிட்டார்கள் என்றும் தெரிவித்துள்ளார். மேற்படி வாடகைதாரர்களுக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பிற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை வாதி தரப்பில் **வா.சா.ஆ.7** ஆக வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

12. வழக்கு நிலுவையில் இருக்கும்பொழுது 2 மற்றும் 3 பிரதிவாதிகள் தங்களை வழக்கில் தரப்பினர்களாக சேர்க்குமாறு இடைநிலை மனு எண்.1/2022 தாக்கல் செய்தார்கள் என்றும், அதன்படி அவர்கள் 2 மற்றும் 3ஆம் பிரதிவாதிகளாக

சேர்க்கப்பட்டதாகவும், வழக்கு சொத்து பாப்பாத்தியம்மாள் என்பவருக்கு மட்டுமே பாத்தியப்பட்டு, அவரது இறப்பு காலம் வரை ஆண்டு அனுபவித்து வந்தார் என்றும், எனவே வாதிக்கும் வழக்கு சொத்தில் 1/2 பாகம் உள்ளது என்றும், அதேபோல் பிரதிவாதிக்கும் வழக்கு சொத்தில் 1/2 பாகம் உள்ளது என்றும், வாதியின் தாயார் மல்லிகா கடந்த 22.07.1988 அன்று இறந்துவிட்டார் என்றும், மேற்படி மல்லிகா அவரது தந்தையார் சண்முக சுந்தரம் மூலம் கதவு எண்.30, டவுன் சர்வே எண்.2505 ஏகாம்பரநாதர் சன்னதி தெருவில் உள்ள வீடு அவருக்கு கிடைக்கப்பெற்றது என்றும், அந்த சொத்து குறித்து மல்லிகாவின் சகோதரி வசந்தி என்பவர் அசல் வழக்கு எண்.124/2008 இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றும், அந்த வழக்கில் இந்த வழக்கின் வாதி முதல் பிரதிவாதி என்றும், இந்த வழக்கின் முதல் பிரதிவாதி, அந்த வழக்கில் 3ஆம் பிரதிவாதி என்றும், அவ்வழக்கில், தனது தந்தையாராக இந்த வழக்கின் முதல் பிரதிவாதி வாதியின் பாகத்தை ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், வழக்கு சொத்தில் ஒரு பகுதியில் வாதி வசித்து வருவதாகவும், மின் இணைப்பு பெற்று மின் கட்டணம் தனியாக செலுத்தி வருவதாகவும், பிரதிவாதி வழக்கு சொத்திற்கான சொத்து வரியை தன் பெயருக்கு மாற்ற முயற்சி செய்ததாகவும், வாதி காஞ்சிபுரம் நகராட்சியில் உரிய நேரத்தில் ஆட்சேபனை தெரிவித்து அதனை தடுத்துவிட்டதாகவும் தெரிவித்துள்ளார். வாதி மின் வாரியத்திற்கு அளித்த கடிதம், அதற்கு மின் வாரியம் அளித்த பதில் ஆகியவை வாதி தரப்பில் **வா.சா.ஆ.8 மற்றும் 9 ஆக** வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதேபோல் வாதி காஞ்சிபுரம் நகராட்சி ஆணையருக்கு அளித்த கடிதம் **வா.சா.ஆ10** வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதி காவல்நிலையத்தில் புகார்

கொடுத்ததாகவும், காவல் அதிகாரிகள் பிரதிவாதியை எச்சரித்து அனுப்பினார்கள் என்றும், மேலும் வாதி வழக்கு சொத்தில் கூட்டு சுவாதீனத்தில் தொடர்ந்து இருக்க இயலாது என்றும், எனவே பிரதிவாதிகள் மீது 1/2 பாகம் கேட்டும், இடைக்கால வருவாய் கோரியும் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

13. முதல் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரையில், வாதிக்கும் தனக்கும் உள்ள உறவு முறையை ஒப்புக்கொள்வதாகவும், வாதி தன்னுடைய மகள் என்றும், பாப்பாத்தி அம்மாள் வழக்கு சொத்தை தன்னுடைய மகன் குப்புசாமிக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்தார் என்றும், செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதன் அசல் ஆவணத்தை தன்னிடம் ஒப்படைத்துவிட்டார் என்றும் முதல் பிரதிவாதி தெரிவித்துள்ளார். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் பிரதிவாதி தரப்பில் **பி.சா.ஆ.1 ஆக** குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, செட்டில்மெண்ட் ஆவணம் நடைமுறைக்கு வந்து குப்புசாமி அவர்கள் வழக்கு சொத்தின் முழு உரிமையாளர் ஆவார் என்றும், வழக்கு சொத்து சம்பந்தமாக எந்த ஒரு ஏற்பாடும் செய்யாமல் மகன் குப்புசாமி காலமாகிவிட்டார் என்றும், தன்னுடைய மகன் குப்புசாமிக்கு முதல்நிலை வாரிசுதாரர்கள் யாரும் உயிருடன் இல்லை என்றும், இந்த பிரதிவாதி அவருடைய இரண்டாம் நிலை வாரிசுதாரர் என்பதனால் வழக்கு சொத்து, மரபு வழியாக தனக்கு கிடைக்கப்பெற்றது என்றும், வாதியின் தாயார் மற்றும் தன்னுடைய முதல் மனைவி மல்லிகா என்பவர் மேற்படி குப்புசாமிக்கு முன்பாகவே காலமாகிவிட்டார் என்றும் தெரிவித்துள்ளார். மேற்படி மல்லிகா மற்றும் பாப்பாத்தி அம்மாள் ஆகியோரின் இறப்புச் சான்றிதழ் பிரதிவாதி தரப்பில் **பி.சா.ஆ.2 மற்றும் 3 ஆக** குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும்

தன்னுடைய முதல் மனைவி மல்லிகா இறந்த பின்பு, பாப்பாத்தி அம்மாள் 19 ஆண்டு காலம் உயிருடன் இருந்தார் என்றும், அவர் உயிருடன் இருந்தபொழுது செட்டில்மெண்ட் ஆவணத்திற்கு பாதகமாக எந்த ஒரு செயலிலும் ஈடுபடவில்லை என்று தெரிவித்துள்ளார்.

14. எனவே வாதி வழக்குரையில் கூறியுள்ள கூற்று உண்மைக்கு புறம்பானவை என்றும் தெரிவித்துள்ளார். மேலும், பிரதிவாதி, தனது மகன் குப்புசாமி என்பவரின் வாரிசு சான்றிதழ் **பி.சா.ஆ.4** குறியீடு செய்யப்பட்டுள்ளது. இந்து வாரிசுரிமைச் சட்டம் நடைமுறைக்கு வந்த பிறகு, Doctrine of Reversion ஒழிக்கப்பட்டுவிட்டது என்றும், இந்த பிரதிவாதிதான் வழக்கு சொத்திற்கு முழு உரிமையாளர் என்றும், வாதிக்கு வழக்கு சொத்தின் மீது எந்த உரிமையும் கிடையாது என்றும், வாதி வழக்கு சொத்தில் உள்ள வாடகைதாரருக்கு சட்ட அறிவிப்பு கொடுத்தார் என்றும், அதனால் வாடகைதாரர்கள் வழக்கு சொத்தில் இருந்த வீட்டை காலி செய்துகொண்டு சென்றுவிட்டனர் என்றும், இது வாதியின் தீய குணத்தை காட்டுகிறது என்றும், வாதி T.S.ஜனார்தனன் என்பவரை காதலித்து திருமணம் செய்து கொண்டார் என்றும், வாதி தன்னுடைய மகள் என்பதனால் பிரதிவாதி தன்னுடைய சொத்தில் அனுமதித்ததாகவும், அதனை சாதகமாக பயன்படுத்திக்கொண்டு வாதி தனக்கு பிரச்சினை கொடுத்து வருகிறார் என்றும், வாதி வளர்ப்பு நாய் வைத்துக் கொண்டு வாடகைதாரர்களை பயமுறுத்தி வருகிறார் என்றும், பிரதிவாதி வாடகை கொடுக்க எந்த ஒரு அவசியமும் இல்லை என்றும், ஏனென்றால் வாதிக்கு தாவா சொத்தில் எந்த ஒரு உரிமையும் இல்லை என்றும், அதனால் வாதிக்கு தாவா சொத்தில் பங்கு தரவேண்டிய அவசியம் ஏற்படாது என்றும், வாதி சரியான நீதிமன்ற கட்டணத்தை செலுத்தவில்லை என்றும், வழக்கு சொத்து கூட்டு

சுவாதீனத்தில் இல்லை என்றும், வழக்கு சொத்து கூட்டு குடும்ப சொத்து அல்ல என்றும், எனவே வழக்கு தள்ளுபடி செய்திட வேண்டும் என்று முதல் பிரதிவாதி கோருகிறார். மேலும் பிரதிவாதி தரப்பில் வழக்கு சொத்திற்கான குடிநீர்வரி ரசீது மற்றும் சொத்து வரி ரசீது ஆகியவற்றை **பி.சா.ஆ.5 மற்றும் 6 ஆக** குறியீடு செய்யப்பட்டுள்ளது.

15. இரண்டு மற்றும் 3ஆம் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர் வழக்குரையில், இந்த வழக்கில் ஐந்தில் ஒரு பாகம் கோரி எதிர்வியாஜ்ஜியம் செய்வதாகவும், மேற்படி வழக்கில் வாதி, பிரதிவாதிகளுக்கு எதிராக 1/2 பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கு சொத்து ஆதியில் தங்கள் தாய்வழி பாட்டியான காலம் சென்ற திருமதி.பாப்பாத்தியம்மாள் என்பவருக்கு சொந்தமானது என்றும், வழக்கு சொத்து மேற்படி பொன்னுசாமி முதலியார் மூலம் 17.11.1965 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம் முன்னிலைக்கு பாப்பாத்தியம்மாளுக்கு கிடைக்கப்பெற்ற சொத்து என்றும், மேற்படி பாப்பாத்தியம்மாள் தனது மகள் வழி பேரனான மைனர் குப்புசாமிக்கு 02.012.1998 அன்று செட்டில்மெண்ட் எழுதிவைத்தார் என்றும், அப்பொழுது மேற்படி குப்புசாமிக்கு 12 வயதுதான் என்றும், எனவே மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தில் பாதுகாவலராக பாப்பாத்தியம்மாள் நியமிக்கப்பட்டார் என்று தெரிவித்துள்ளார்,

16. மேற்படி குப்புசாமி 11.07.2010 அன்று காலமான பிறகு அது அமலுக்கு வரவில்லை என்றும், மேலும் வருவாய் ஆவணங்களிலும் தாவா சொத்தின் உரிமை பாப்பாத்தியம்மாள் பெயரிலேயே இன்றுவரை இருந்து வருகிறது என்றும், மேற்படி பாப்பாத்தியம்மாள 19.12.2007 ஆம் ஆண்டு இறந்துவிட்டார் என்றும், மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் இன்று வரை அமலுக்கு வராமல் பாப்பாத்தியம்மாள்

பெயரில் ஆவணங்கள் உள்ளது என்றும், தாவா சொத்தில் பாப்பாத்தி அம்மாள் கடைசி மூச்சு உள்ளவரை வாடகைக்கு இருக்கும் நபர்களிடம் உரிமையாளர் என்ற வகையில் வாடகை வசூல் செய்து வந்தார் என்றும் தெரிவித்துள்ளார்.

17. மேற்படி பாப்பாத்தியம்மாள் ஒரு பொன்னுசாமி என்பவரை திருமணம் செய்து கொண்ட பின்பு மேற்படி பாப்பாத்தியம்மாளுக்கும் பொன்னுசாமி முதலியாருக்கும் ஒரே குழந்தையாக ஒரு கஸ்தூரி அம்மாள் என்பவர் பிறந்தார் என்றும், அவருக்கு சண்முகம் சுந்தரம் என்பவருக்கு திருமணம் செய்து கொண்டு அவர்கள் இருவருக்கும் ஐந்து பெண் குழந்தைகள் முறையே வசந்தி, விஜயலட்சுமி, ஷர்மிளா, சசிகலா, மற்றும் மல்லிகா ஆகிய ஐந்து பெண் குழந்தைகள் என்றும், இந்த வழக்கின் வாதி அமுதக்கனி மல்லிகாவின் மகள் ஆவார் என்றும், மல்லிகாவின் கணவரான திரு.சேகர் முதல் பிரதிவாதி ஆவார் என்றும், இவர்களுக்கு பிறந்த குழந்தைகள் காலஞ்சென்ற குப்புசாமி மற்றும் வாதியாகிய அமுதக்கனி ஆகிய இருவர் மட்டுமே என்றும், குப்புசாமி தன் தாயார் மல்லிகாவுக்கு முன்பே இறந்துவிட்டார் என்றும், ஆகவே, தாவா சொத்தின் ஒரு பாக உரிமை மல்லிகாவின் கணவர் என்ற முறையில் முதல் பிரதிவாதியான சேகர் அவர்களுக்கும், வாதி அமுதக்கனி என்பவருக்கும், 1/2 பாகம் உரிமை உள்ளது என்றும், மேலும் காலஞ்சென்ற மல்லிகாவின் கணவர் ஒரு மீரா என்பவரை இரண்டாம் திருமணம் செய்துகொண்டார் என்றும், அவர்களுக்கு இரு குழந்தைகள் என்றும், மேற்படி சேகர், வாதி அமுதக்கனி மற்றும் காலஞ்சென்ற குப்புசாமி ஆகியோரை எந்தவிதமான பராமரிப்பும் செய்யாத காரணத்தினால் மேற்படி மல்லிகாவின் பாட்டியான காலஞ்சென்ற பாப்பாத்தியம்மாள் குப்புசாமிக்கு ஒரு ஆதரவு செய்யவேண்டும் என்ற காரணத்தின் அடிப்படையில், 02.12.1998 தேதியில் தன்னுடைய கொள்ளுபேரன்

குப்புசாமிக்கு தாவா சொத்து குறித்து செட்டில்மெண்ட் ஆவணம் செய்து வைத்தார் என்றும், அந்த செட்டில்மெண்ட் ஆவணம் ஆச்சாரத்துக்கும் அமலுக்கும் வராத நிலையில் குப்புசாமி காலமாகிவிட்டதால், மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிய சொத்துக்கு உரிமையாளரான பாப்பாத்தியம்மாள் பெயரில் சென்றுவிட்டது என்றும், அந்த செட்டில்மெண்ட் ஆவணம் குப்புசாமி இருக்கும் வரை மேஜர் வயது எட்டிய உடனும் நடைமுறைக்கு வரவில்லை என்றும், மேற்படி தாவா சொத்து குறித்து வழக்கின் 2 மற்றும் 3 பிரதிவாதிகள் இடைநிலை மனு எண்.1/2022 உத்தரவின்மூலம் வழக்கில் தரப்பினராக இணைத்துக் கொண்டு தன்னுடைய பாட்டியான பாப்பாத்தி அம்மாள் 02.12.1998 தேதிய மைனர் குப்புசாமி செட்டில்மெண்ட் எழுதி வைத்த தாவா சொத்தை 1/5 தலா வசந்தி, சியாமளா, சசிகலா, மல்லிகா, விஜயலட்சுமி ஆகியோர்களுக்கு சரிசமமாக வழங்கி உத்தரவிடக்கோரி எதிர்வியாஜ்ஜியம் தாக்கல் செய்வதாகவும், 2 மற்றும் 3 பிரதிவாதிகள் இருவரும் உரிய நீதிமன்ற கட்டணம் செலுத்த தயாராக இருப்பதாகவும், எனவே வழக்கு சொத்தில் 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கும் தலா 1/5 பாகம் வழங்கி உத்தரவிடுமாறு கோரியுள்ளனர்.

18. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. இரு தரப்பு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. வழக்கு அட்டவணை சொத்து ஆதியில் பாப்பாத்தியம்மாள் என்பவருக்கு சொந்தமானது என்பதும், அதாவது வாதியின் தாய்வழி பாட்டிக்கு சொந்தமானது என்பதும், மேற்படி பாப்பாத்தியம்மாள என்பவருக்கு 17.11.1965 அன்று அவரது கணவர் பொன்னுசாமி முதலியார் எழுதிவைத்த செட்டில்மெண்ட் பத்திரம் முன்னிலைக்கு கிடைக்கப்பெற்றது என்பதும், மேற்படி பாப்பாத்தியம்மாள் 02.12.1998

அன்று மைனராக இருந்த தனது பேரன் மற்றும் வாதியின் சகோதரன் குப்புசாமிக்கு 02.12.1998 அன்று செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்துள்ளார் என்பதும் ஆவணங்கள் வாயிலாக தெரியவருகிறது. மேற்படி குப்புசாமி என்பவர் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைக்கும்பொழுது மைனர் என்பதாலும், தன்னைத்தானே பார்த்துக்கொள்ள இயலாதவர் என்பதாலும், மேற்படி 02.12.1998 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்திற்கு பாப்பாத்தியம்மாள் என்பவர் தன்னையே பாதுகாவலராக நியமித்து தனது காலத்திற்கு பின் குப்புசாமிக்கு வழக்கு சொத்து சேரவேண்டும் என்று எழுதி வைத்துள்ளார் என்பதும் தெரியவருகிறது.

19. மேலும் வாதி மற்றும் குப்புசாமி ஆகியோர் மல்லிகா மற்றும் முதல் பிரதிவாதி சேகர் ஆகியோருக்கு பிறந்தவர்கள் ஆவார்கள். மேற்படி முதல் பிரதிவாதியின் மனைவி மல்லிகா இறந்தபிறகு, முதல் பிரதிவாதி இரண்டாம் திருமணம் செய்து அவர்களுக்கும் இரண்டு குழந்தைகள் பிறந்துள்ளன. இதற்கிடையே மேற்படி குப்புசாமி என்பவரும் தனது தாயார் மல்லிகா இறப்பதற்கு முன்பே இறந்துவிட்டார். எனவே வாதியானவர் தனது தாய்வழிப்பாட்டி, தனது சகோதரனுக்கு எழுதிக்கொடுத்த வழக்கு சொத்தில் 1/2 பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

20. மேற்படி சூழ்நிலையில், முதல் பிரதிவாதி இறந்துபோன குப்புசாமி என்பவரின் தந்தை மற்றும் இரண்டாம் நிலை வாரிசு என்கிற அடிப்படையில் வழக்கு சொத்து தனக்கு உரிமையானது என்று உரிமை கோருகிறார். அதேசமயம் 2 மற்றும் 3

பிரதிவாதிகள், வாதியின் தாய் மல்லிகாவின் உடன்பிறந்த சகோதரிகள் ஆவார்கள். எனவே 2 மற்றும் 3 பிரதிவாதிகள் தங்களுக்கும் வழக்கு சொத்தில் பாகம் கோரி எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளனர்.

21. வழக்கு சொத்து 02.12.1988 தேதியிட்ட செட்டில் ஆவணத்தின்படி அதன் உரிமையாளரான குப்புசாமி என்பவர் 11.07.2010 அன்று வழக்கு சொத்து குறித்து எந்த ஏற்பாடும் செய்யாமல் இறந்துவிட்டார். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தின் குப்புசாமிக்கு பாதுகாவலராக நியமிக்கப்பட்ட அவரது தாய்வழிபாட்டி பாப்பாத்தி அம்மாள் என்பவரும் 19.12.2007 அன்று இறந்துவிட்டார். குப்புசாமியின் தாய் மல்லிகாவும் 22.07.1988 அன்றே இறந்துபோய்விட்டார். இந்நிலையில் குப்புசாமி இறந்தபிறகு அவரது இரண்டாம் நிலை வாரிசான வாதியின் தந்தை அதாவது முதல் பிரதிவாதி சேகர் தனிப்பட்ட முறையில் உரிமையாளர் என்றே இந்த நீதிமன்றம் கருதுகிறது. மேலும் முதல் பிரதவாதி காஞ்சிபுரம் வட்டாட்சியர் வழங்கிய மேற்படி குப்புசாமியின் வாரிசு சான்றிதழ் **பி.சா.ஆ4** தாக்கல் செய்துள்ளார். இரண்டாம் நிலை வாரிசுதாரர் பட்டியலில் தந்தை உயிருடன் இருக்கும்பட்சத்தில் மற்ற நபர்களுக்கு பாகம் கொடுக்க தேவையில்லை என்று இந்து வாரிசுரிமை சட்டம் பிரிவு 11 கூறுவதால், சகோதரிக்கு பாகம் கொடுக்க தேவையில்லை என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. எனவே, முதல் பிரதிவாதிக்கு தனிப்பட்ட வகையில் சொந்தமான வழக்கு சொத்தில், வாதி உரிமையோ பாகமோ கோர இயலாது. அதேபோல் 2 மற்றும் 3 பிரதிவாதிகளும் வழக்கு

சொத்தில் உரிமையோ பாகமோ கோர இயலாது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. வழக்கு சொத்து முதல் பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்று இந்த நீதிமன்றம் முடிவு செய்கிறது. ஆகவே வாதி கோரிய பாகப்பிரிவினை பரிகாரம் வாதிக்கு வழங்கத்தக்கது அல்ல என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது. அதேபோல் 2 மற்றும் 3 பிரதிவாதிகளின் எதிர்பாத்ய கோரிக்கையும் 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு வழங்கத்தக்கதல்ல என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

22. எனவே வழக்கு சொத்து வாதி மற்றும் பிரதிவாதியின் கூட்டு குடும்ப சொத்து இல்லை என்று வழக்கெழுவினா 1 முடிவு செய்யப்படுகிறது. வழக்கு சொத்து வாதி மற்றும் பிரதிவாதியின் கூட்டு குடும்ப சொத்து இல்லை என்று வழக்கெழுவினா 1 முடிவு செய்யப்பட்டுவிடபடியால், வாதிக்கு பாகப்பிரிவினை வழங்கத்தேவையில்லை என்று வழக்கெழுவினா 2 வாதிக்கு எதிராக தீர்மானிக்கப்படுகிறது. வழக்கெழுவினா 2 வாதிக்கு பாகப்பிரிவினை வழங்கத்தேவையில்லை என்று வாதிக்கு எதிராக தீர்மானிக்கப்பட்டுவிடபடியால், வாதி கோரிய வழக்கு சொத்திற்கான இடைக்கால வருவாய் பரிகாரமும் வாதிக்கு வழங்கத்தக்கதல்ல என்று வழக்கெழுவினா 3 வாதிக்கு எதிராக தீர்மானிக்கப்படுகிறது. மேற்சொன்ன வகையில் வழக்கெழுவினா 1 முதல் 3 வாதிக்கு எதிராக தீர்மானிக்கப்பட்டுவிடபடியால் வாதிக்கு இதர பரிகாரம் எதுவும் வழங்கத் தேவையில்லை என வழக்கெழுவினா 4 முடிவு செய்யப்படுகிறது.

இறுதியாக இந்த அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

சுருக்கெழுத்து தட்டச்சருக்கு என்னால் நேரடியாக சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சரிபார்க்கப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் 2026 ஆம் வருடம் ஏப்ரல் திங்கள் 15ஆம் நாள் அவையறிய பகரப்பட்டடது.

THIRUNAVUKKARASU THIRUMAL

Additional Sub Judge[FAC], Kancheepuram
Digitally signed by THIRUNAVUKKARASU THIRUMAL
Date: 2026.04.15 15:30:43 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்.(பொறுப்பு)

<u>வாதி தரப்பு சாட்சிகள்.</u>
வா.சா.1 அமுதகனி

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 02.12.1998 | பாப்பாத்தியம்மாள் குப்புசாமி பெயருக்கு எழுதிய செட்டில்மெண்ட் ஆவணம் சான்றிட்ட நகல். |
| வா.சா.ஆ.2 | 22.07.1988 | மல்லிகா என்பவரின் இறப்பு சான்று நகல். |
| வா.சா.ஆ.3 | 11.07.2010 | குப்புசாமி என்பவரின் இறப்பு சான்று நகல். |
| வா.சா.ஆ.4 | 19.12.2007 | பாப்பாத்தியம்மாள் என்பவரின் இறப்பு சான்று நகல். |
| வா.சா.ஆ.5 | 27.05.2013 | முதல் பிரதிவாதி மற்றும் வழக்கு சொத்தில் இருந்த வாடகைதாரர்களுக்கு வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல். |
| வா.சா.ஆ.6 | 08.06.2013 | முதல் பிரதிவாதி வாதிக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு நகல். |
| வா.சா.ஆ.7 | | அஞ்சல் ஒப்புடைக அட்டைகள் (4 எண்ணிக்கை) |
| வா.சா.ஆ.8 | 28.08.2006 | வாதி மின்சார வாரியத்திற்கு அனுப்பிய கடிதம் நகல். |
| வா.சா.ஆ.9 | 17.07.2013 | வாதிக்கு மின்சார வாரியம் அனுப்பிய பதில் நகல். |
| வா.சா.ஆ.10 | 22.07.2013 | வாதி காஞ்சிபுரம் நகராட்சி ஆணையருக்கு அனுப்பிய கடிதம் நகல். |

<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள்</u>

பி.சா.1 சேகர்
பி.சா.2 வசந்தி

<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்</u>

| | | |
|---|---|---|
| பி.சா.ஆ.1 | 02.12.1998 | பாப்பாத்தியம்மாள் குப்புசாமி பெயருக்கு எழுதிய செட்டில்மெண்ட் ஆவணம் சான்றிட்ட நகல். |
| பி.சா.ஆ.2 | 28.07.1988 | மல்லிகா என்பவரின் இறப்பு சான்று நகல். |
| பி.சா.ஆ.3 | 19.12.2007 | பாப்பாத்தியம்மாள் என்பவரின் இறப்பு சான்று நகல். |
| பி.சா.ஆ.4 | 21.03.2011 | குப்புசாமி என்பவரின் வாரிசு சான்று நகல். |
| பி.சா.ஆ.5 | 16.07.2021 | வழக்கு சொத்திற்கான, முதல் பிரதிவாதி பெயரில் உள்ள குடிநீர் வரி ரசீது நகல். |
| பி.சா.ஆ.6 | 16.07.2021 | வழக்கு சொத்திற்கான, முதல் பிரதிவாதி பெயரில் உள்ள சொத்து வரி ரசீது நகல். |

THIRUNAVUKKARASU THIRUMAL

Additional Sub Judge[FAC], Kancheepuram
Digitally signed by THIRUNAVUKKARASU THIRUMAL
Date: 2026.04.15 15:31:04 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம். (பொறுப்பு)